**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி**
**குற்றப்பலவகை மனு எண்.757/2026**
**IN**
**குற்ற எண்.145/2026**
**நாள் – 09.07.2026**

அரசுக்காக – காவல் உதவி ஆய்வாளர், ஆழ்வார்குறிச்சி கா.நி.கு.எண்.145/26
... மனுதாரர்/புகார்தாரர்

/எதிர்/

விஸ்வநாதன்
... எதிர்மனுதாரர்/எதிரி

<u>**உத்தரவு**</u>

மனுதாரர்/வாதி தரப்பில் எதிரி மீது ஆழ்வார்குறிச்சி காவல் துறையினரால் பிரிவு 191(2), 191(3), 126(2), 296(b), 115(2), 118(1), 351(3) BNS ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, எதிரி தென்காசி மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்ற கு.ப.ம.எண்.1407/2026, நாள் 06.05.2026 ம் தேதியிட்ட உத்தரவின்படி பிணையில் சென்றுள்ளதாகவும், ஆனால் பிணை உத்தரவில் கண்டுள்ளபடி 30 நாட்கள் நிபந்தனை ஜாமீன் கையெழுத்து போடாமல் எதிரி தலைமறைவாகிவிட்டார் என்றும், எனவே எதிரியின் பிணையை ரத்து செய்ய உத்தரவிடக் கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2)மேற்படி மனுவின் பேரில் எதிரிக்கு 04.06.2026 அன்று நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி மேற்படி மனுவிற்கு விளக்கம் அளிக்க இந்நீதிமன்றத்திலிருந்து அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் எதிரிக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் தான் நீதிமன்ற உத்தரவை கடைபிடிக்க முடியவில்லை என்றும், எதிரி நீதிமன்ற உத்தரவை பின்பற்ற தயாராக இருப்பதாகவும், மேலும், எதிரி விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு தருவதாகவும், சாட்சிகளை கலைக்கவோ, மிரட்டவோ மாட்டார் என்றும் கூறியுள்ளார்.

3)எனவே, இந்த வழக்கில் எதிரிக்கு தென்காசி மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம் நிபந்தனையுடன் கூடிய பிணை உத்தரவு வழங்கி அதனை சரிவர எதிரி கடைபிடிக்காமல் இருந்ததற்கு எதிரி தரப்பில் சொல்லும் காரணம் நியாயமானதாகவும், போதுமானதாகவும் இருப்பதாலும், வழக்கின் தன்மை,

நீதியின் நலனைக் கருத்தில் கொண்டு எதிரிக்கு தென்காசி மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்ற கு.ப.ம.எண்.1407/2026, நாள் 06.05.2026 ம் தேதியிட்ட உத்தரவை ரத்து செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்று முடிவு செய்து, இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

MUTHU LAKSHMI

Digitally signed by MUTHU LAKSHMI
Date: 2026.07.09 17:38:18 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.